**நாள்: 14.12.2021**

**<u>அசல் வழக்கு எண்:122/2015</u>**

<u>வா.சா.1 முன்னிலை சத்தியபிரமாணம் செய்யப்பட்டதன்பேரில் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-</u>

வீரப்பனுக்கு மனைவி உள்ளாரா என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு உயிருடன் இருந்தார் அவர் பெயர் வடுவம்மாள். வடுவம்மாளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் 1 மற்றும் 2 பிரவாதிகளிடம் தாவா சொத்தை பொறுத்து கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளேன் என்றுதான் கட்சி நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்தினைகிரய ஒப்பந்தப்படி எனக்கு எழுதிகொடுக்க வேண்டும் என்றுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தை கிரயம் செய்து கொடுக்க வேண்டும் என்றுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் வேறு எந்த பரிகாரமும் கோரவில்லை என்றாலும் சரிதான். சிட்டா அடங்கல் அனைத்தும் இன்றைய தேதிவரை வீரப்பன் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். வீரப்பன் எப்போது இறந்தார் என்றால் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு இறந்தார். நான் சர்வே எண்.486/12க்காக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.5, ம.சா.ஆ.6 ஆவணத்தில் உள்ள சர்வே எண்.486/12 மற்றும் சர்வே எண்.481/2 வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த ஆவணம் பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்தின் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.9 மற்றும் 10 ஆவணங்களில் வீரப்பன் என்பவர் பெயர்தான் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணத்தில் எந்த சர்வே எண் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சர்வே எண்.458/3, 2 என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.13, வா.சா.ஆ.14 ஆவணங்கள் 2017 மற்றும் 2021ம் ஆண்டு வழக்கிற்கு பின்னிட்டு பெறப்பட்ட கிஸ்தி ரசீதுக்ள என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களில் சொத்தின் உரிமையாளராக வீரப்பன் காட்டப்பட்டுள்ளார் என்றால் சரிதான். 1997லிருந்து 2013 வரை நான் தாவா சொத்தை அனுபவித்து வந்தேன் என்பதை காண்பிக்க ஆவணம் ஏதும் இந்நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான் 1995 மற்றும் 1997 ஆண்டுகளில் ஏற்பட்ட கிரய ஒப்பந்தத்திலிருந்து 26 ஆண்டுகளாக நாங்கள்தான் சாகுபடி செய்து வருகிறேன் 1995 மற்றும் 1997ல் ஏற்பட்டதாக சொல்லப்படும் கிரய ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1997லிருந்து 2013 வரை கிரயம் செய்துகொடுக்க வேண்டி சட்ட நடவடிக்கைகள் ஏதும் எடுத்தீர்களா என்றால் இல்லை. நான் சொத்தை கிரய ஒப்பந்தம்படி கிரயம் செய்து கொடுக்கவேண்டும் என்றுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் வழக்கு சொத்தை அனுபவத்தின் அடிப்படையில் கேட்கவில்லை என்றாலும் சரிதான். நான் முதல்முறையாக தாவா சொத்திற்கு சென்றேன் என்றால் 1996ம் ஆண்டு தாவா சொத்திற்குள் சென்றேன். 1996லிருந்துதான் தாவா சொத்துக்குள் சென்றிருக்கிறேன் என்று கட்சியாடி வருகிறேன் என்றால் சரிதான். 05.04.1995ல் நான் ரூ.11,100/-கொடுத்துள்ளேன என்றால் ரூ.8100/- கொடுத்தேன். நான் ரூ.11,100/- எந்த தேதி வருடம் கொடுத்தேன் என்றால் 6ம் மாதம் கொடுத்தேன் எந்த தேதி என ஞாபகமில்லை. எத்தனை முறையாக தொகை கொடுக்கப்பட்டது என்றால் 3 முறையாக கொடுக்கப்பட்டது. 2வது தொகை எப்போது கொடுக்கப்பட்டது என்றால் முதல் தவணை கொடுக்கப்பட்டு 15 நாள் கழித்து 2வது தொகை கொடுக்கப்பட்டது. 2வது தொகை எவ்வளவு என்றால் ரூ.2500/-.மூன்றாவது தொகை எவ்வளவு என்றால் ரூ,500/-. மீதத்தொகை எவ்வளவு என்றால் ரூ.500/-. முழுத்தொகையும் கொடுத்துவிட்டீர்களா என்றால் முழுத் தொகையும் கொடுத்துவிட்டோம் முழு தொகையும் கொடுத்த பிறகு பதிவுக்கு வரவில்லை. முழுத்தொகையும் எந்த தேதி எந்தமாதம் எந்த வருடம் என்றால் 6ம் மாதம் 1995ல் கொடுக்கப்பட்டது. முழு விவரமும் கொடுத்த விவரம் யார் யாருக்கு தெரியும் என்றால் திருமாவளவன், கோவிந்தராஜ் ஆகியோருக்கு தெரியும் கோவிந்தராஜ் தற்போது இறந்துவிட்டார். முழு தொகை கொடுத்த பிறகு எந்த வருடம் எந்த தேதி கிரயம் செய்து கொடுக்க சொல்லி கேட்டேன் என்றால் 1997ம் வருடம் கேட்டேன் அப்போது அவர் மறுத்தார். எனக்கும் பிரதவாதிக்கு இடையே எந்த கிரய ஒப்பந்தமும் ஏற்படவில்லை என்பதால்தான் முன்னுக்கு பின் முரணாக தெரிவிக்கிறேன் என்றால் சரியல்ல. கடையாசியாக நான் கிரயம் கேட்டபோது எந்த சொல்லி மறுத்தார்கள் என்றால் தற்போது முடியாது பின்னர் செய்து தருவதாக சொல்லி மறுத்தார்கள். நான் ரூ,10000/- வழக்கு சொத்திற்காக செலவு செய்ததாக வழக்குரையில் சொல்லியுள்ளதற்கு

எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எந்த செலவும் செய்யவில்லை வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரிதான். 1997லிருந்து இன்றைய தேதி வரை தாவா சொத்திற்கு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வரவில்லை என்றால் சரிதான். வழக்குரையில் நான் கூறியுள்ளதுபோல் 18 ஆண்டுகளாக வழக்கு சொத்தை அனுபவம் செய்துவரவில்லை என்றால் சரியல்ல. வாதியாக இருந்துகொண்டு வழக்குரையில் முன்னுக்குப்பின் முரணாக இரு கட்சிகள் சொல்ல சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையான உரிமையாளருக்கு எதிராக எவ்வித நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் எந்த நேரத்தில் அனுபவம் செய்துவரவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சந்தை மதிப்பு என்னவென்றால் அரசாங்க மதிப்பை நாங்கள் பார்ப்பதில்லை பக்கத்தில் உள்ள நிலம் என்ன விலை விற்கிறதோ அதை பொறுத்துதான் வாங்குவோம். தற்போதைய மதிப்பு என்னவென்றால் பக்கத்தில் யாரும் விற்கவில்லை அதுபற்றி எனக்கு தெரியாது. தற்போது தாவா சொத்து ரூ.25 இலட்சம் போகும் என்றாலும் அதனை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகளின் சொத்தை அபகாரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1997ம் ஆண்டு தாவா சொத்தை வாதி ஆக்கிரமித்துள்ளதாக வழக்குரையில் சொல்லியுள்ள விவரம் தவறானது என்றாலும் அதனால் அதற்கான ஆவணத்தை முன்னிலைப்படுத்தவில்லை என்றாலும் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு எதிராக கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வீரப்பன் என்பவருக்கு பாலகிருஷ்ணன் மற்றும் தமிழ்செல்வன் ஆகியோர்தான் வாரிசுகள் என்றாலும் வேறு வாரிசுகள் இல்லை என்றாலும் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.